கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

MCOP No.596/2021

ம.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.மனோகர் | தொழில் | |
| த/க பெயர் | | மதம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூகா | | தேதி | 07.11.2025 |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர்கள் தரப்பு சாட்சி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தை என் முதல் நிலை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

**2 ஆம் எதிர்மனுதார தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்கும் வகைக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள விபரம் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்துள்ள வாக்குமூலத்தில் நான் மாலை 06.40 மணிக்கு நிலக்கோட்டை மதுரை மெயின் ரோட்டில் மார்நாடு அருப்பன சாமி கோவிலில் சாமி தரிசனம் முடித்துவிட்டு வெளியில் நின்று கொண்டிருந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு விபத்தில் இறந்தவர் எனது அண்ணன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். லாரியானது மேற்கில் இருந்து கிழக்கு பார்த்து தான் நின்று இருந்தது என்றால் சரிதான். சம்பவத்தின் போது வடகிருந்து தெற்கு பக்கமாக வந்த போது தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு விபத்திற்கு எனது அண்ணன் தான் காரணம் என்றாலும், என் அண்ணன் குடும்பத்திற்காக இழப்பீடு வழங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN

Digitally signed by G SARAN
Date: 2025.11.10 12:07:43 +0530

Additional District and Sessions Judge(FAC),

Dindigul.